# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, மார்ச் 1, 2025 Weekly E-paper ● March 1, 2025



## திமிறி எழட்டும் திராவிட நாடு!

சுப.வீரபாண்டியன்

### அரியலூரில் திராவிடப்பள்ளி மாணவர்

### முதல்வரை வாழ்த்துவோம்!

தலையங்கம்

### நேர்மைக்குத் தண்டனை, அநீதிக்கு மாலையா?

-வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, மார்ச் 1, 2025    Weekly E-paper ● March 1, 2025


# திமிறி எழட்டும் திராவிட நாடு!

**சுப.வீரபாண்டியன்**




மொழிப் போராட்டம் நமது உயிர்ச் சிக்கல்! தொகுதி மறுசீரமைப்பு, நம் உரிமைச் சிக்கல் என்று மிக எளிமையாகவும், அழுத்தமாகவும் விளக்கி இருக்கிறார், தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர்!

மொழிச் சிக்கலை நாம் தொடர்ந்து சந்தித்து வருகிறோம். இந்திய விடுதலைக்கு முன் இருந்தே, இந்தச் சிக்கல் தொடங்கி விட்டது! 1926 ஆம் ஆண்டிலேயே இந்தியால் வரக்கூடிய ஆபத்தை மிகத் தொலைவில் முன் உணர்ந்து குடியரசு ஏட்டில் எழுதியவர் தந்தை பெரியார் ! இந்தியும், இராமரும் என்றென்றும் நமக்குச் சிக்கல்தான் என்று அவர் சொன்னது இன்றுவரையில் உண்மையாக உள்ளது!

இப்போது புதிதாக, தொகுதிகள் மறு சீரமைப்பு என்னும் புதிய சிக்கல் புறப்பட்டு இருக்கிறது! இதற்கு முன்பு இந்தச் சிக்கல் 1971, 2001 ஆம் ஆண்டுகளிலேயே பேசப்பட்டது என்றாலும், இப்போதுதான் அது முழு உருவம் பெற்று இருக்கிறது!

இதுகுறித்து முழு விவரங்கள் அடங்கிய கட்டுரை ஒன்று இந்த ஏட்டிலேயே இடம்பெற்றுள்ளது. இதனால் தமிழ்நாடு ஒரு பெரும் பின்னடைவைச் சந்திக்கும் ! இந்தியாவின் எதிர்கால முடிவுகள் எல்லாவற்றையும், வட மாநிலங்களே தீர்மானிக்கும் இடத்திலும், தமிழ்நாடு, கேரளம், , ஆந்திரம், தெலுங்கானா ஆகிய மாநிலங்கள் வெறுமனே வாய் பொத்திப் பின் செல்லும் நிலைக்கும் வந்து சேரும்!




இந்தக் கட்டத்தில்தான், இதனைக் கடுமையாக எதிர்க்கும் முதல் குரலை நம் தமிழ்நாட்டின் முதலமைச்சர் வெளியிட்டார்! இப்போது கர்நாடகத்தின் முதலமைச்சர் சித்தராமைய்யா அந்தக் குரலுக்கு அழுத்தம் சேர்த்திருக்கிறார்!

தென்னகத்தில் உள்ள அனைத்து மாநிலங்களும் பாதிக்கப்படுகின்றன. எனவே இந்தியாவில் தெற்கில் உள்ள ஐந்து மாநிலங்களும் ஒருங்கிணைந்து

இந்த அறைகூவலை எதிர்கொள்ள வேண்டும் என்று அவர் கூறியிருக்கிறார்!

வடநாடு, தென்னாடு என்ற வேறுபாடுகளை மறந்து, மொழிவாரி மாநிலங்களாக இயங்கிக் கொண்டிருக்கும் நாட்டில், மீண்டும் வடக்குதான் வாழும் , தெற்கு தேயும் என்னும் உணர்வை இன்றைய ஒன்றிய அரசு ஏற்படுத்த முயற்சி செய்கிறது!

இது ஜனநாயகத்திற்கும், சமத்துவத்திற்கும் எதிரான போக்காக இருக்கிறது! இதனை முறியடித்தே தீர வேண்டும் என்று நம் முதல்வர் முன்னெடுத்து இருக்கும் வழியில் அனைவரும் ஒருங்கிணைய வேண்டும். இது கட்சிப் பிரச்சனை அன்று, தமிழ்நாட்டின் பிரச்சனை - தமிழர்களின் உரிமைப் பிரச்சனை!

ஐந்து மாநிலங்களும் ஒருங்கிணைந்து போராட வேண்டும் என்று சித்தராமையா சொல்லி இருப்பது மிகச் சரியானது !

திமிறி எழட்டும் திராவிட நாடு! ●

# அரியலூரில் திராவிடப்பள்ளி மாணவர்...









அரியலூரில் 24-02-2025 அன்று திராவிடப் பள்ளியின் முன்னாள், இந்நாள் மாணவர்கள் சந்திப்புக் கூட்டம் ஒருங்கிணைப்பாளர் பொள்ளாச்சி மா.உமாபதி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அறம்மதி வரவேற்புரையாற்ற, புலவர் செந்தமிழ் கௌதமன், 'கருஞ்சட்டைத் தமிழர்' மின்னிதழ் உதவி ஆசிரியர் வெற்றிச் செல்வன், பேரவையின் சென்னை மாவட்டத் தலைவர் கார்த்தி, தலைமை நிலையச் செயலாளர் எட்வின், இந்திரக்குமார் ஆகியோர் கருத்துரைக்குப்பின், திராவிடப் பள்ளியின் நிறுவுநரும், பேரவைத் தலைவருமான தோழர் சுப.வீரபாண்டியன் அவர்கள் நிறைவுரையாற்றினார்.

# "இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம் – நீங்கள் எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!"





















*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## முதல்வரை வாழ்த்துவோம்!

*மார்ச் திங்கள் முதலாம் நாள் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள்.*

*தமிழ்நாட்டின் முதல்வரும், தி.மு. கழகத்தின் தலைவருமான அவர்தான் 'திராவிட மாடல்' அரசை விரல்நீட்டிக் காட்டி காவிகளின் வயிற்றில் புளியைக் கரைத்தவர்.*

*தமிழ்நாட்டைத் தூக்கி நிறுத்திய அவரின் அரசை 'மக்கள் விரோத அரசு - தேசவிரோத அரசு' என்று ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவே பேசுகிறார் என்றால், அவரிடம் அச்சம் தெரிகிறது.*

*பணத்தை வாரி இறைத்து, சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கிப் பல ஆட்சிகளைக் கவிழ்த்து, பின்வாசல் வழியாக ஆட்சியைப் பிடிக்கும் காவிகளால் தமிழ்நாட்டில் கால்வைக்கக் கூட முடியவில்லை!*

*தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், தலைவர் மு.க.ஸ்டாலின், மொத்தத்தில் திராவிட வித்து இருக்கும்வரை தமிழ்நாட்டில் காவிக்கொடி ஏறாது என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.*

*'குன்றுகாப்போம்' என்று கத்தினாலும், 'அரோகரா' என்று காவடி தூக்கினாலும், 'வேல்வேல்' என்று வேலைத் தூக்கிக் கொண்டு ஓடினாலும் தமிழ்நாட்டில் மதக்கலவரத்தை உருவாக்க முடியாது சங்கிகளால். காரணம் திராவிடச் சித்தாந்தமும், முதல்வர் ஸ்டாலின் அவர்களின் நிர்வாகத் திறன்மிக்க ஆட்சியும்தான்.*

*'இந்தி முகமூடிக்குப் பின்னால் சமஸ்கிருதம் இருக்கிறது' 'ஒரு நொடிபோதும் வரியை நிறுத்த' என்று நெஞ்சுயர்த்தி, தன்மானத்துடன் பேசும் எங்கள் முதல்வரே, உங்களை வாழ்த்துகிறது தமிழ்நாடு!*

*'செயற்கரிய செய்வர் பெரியார்' என்பதற்கு நீங்கள். 'இவன் தந்தை என்நோற்றான் கொல்' எனும் சொல்லுக்கும் நீங்களே!*


*இமையத்தில் புலி பதித்த சோழனாக, தமிழ்நாட்டின் முதல்வராக, தலைவராக, பொதுவுடைமைத் தோழர் ஜோசப் ஸ்டாலினைக் கண்முன் நிறுத்தும் மு.க.ஸ்டாலின் அவர்களே!*

*'திராவிட இயக்கத் தமிழர் பேரவை' 'கருஞ்சட்டைத் தமிழர்'களாக நாங்கள் உங்கள் பிறந்தநாளில் வாழ்த்துகிறோம்,*

*வாழ்க நீங்கள், வாழ்க நீவீர் சிறந்தும், நிறைந்தும்!*

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408



மொழிப் பிரச்சினைக்கு ஒரே தீர்வுதான் இருக்கிறது; சமஸ்கிருதம் ஆட்சி மொழியாக வருகின்ற காலம்வரை, இந்திக்கே நாம் முன்னுரிமை தந்து, நமது வசதிக்காக ஆட்சி மொழியாக்கிக் கொள்ள வேண்டும்.

- கோல்வாக்கரின் ***'Bunch of thoughts'*** அத்தியாயம் **8**, பக்.***113.***



# தொகுதி மறுசீரமைப்பு


## நேர்மைக்குத் தண்டனை, அநீதிக்கு மாலையா?

**வெற்றிச்செல்வன்**

நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக, வரும் 05.03.2025 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுத்துள்ளார் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 82-வது பிரிவு, மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு, மக்களவைத் தொகுதிகளை மறுசீரமைப்பு செய்வதற்கு வழிவகை செய்கிறது. இத்தகைய மறுசீரமைப்பு தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களின் அழுத்தத்தின்மூலம் 2026–ஆம் ஆண்டு வரையிலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால், 2026–க்குப் பிறகு நடக்கவிருக்கும் ஆபத்தை உணர்ந்து முதல் குரலை எழுப்பியுள்ளார் தமிழ்நாடு முதல்வர்.

தொகுதி மறுசீரமைப்பு நிறுத்தி வைக்கப்பட்டதற்குக் காரணமே மக்கள்தொகையை கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கம்தான். தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்கள் எடுத்த கட்டுப்பாட்டு நடவடிக்கைகளால்தான், மக்கள்தொகை வளர்ச்சி கணிசமாகக் குறைந்துள்ளது. ஆனால் இவ்வாறு மக்கள்தொகையைக் கட்டுப்படுத்திய மாநிலங்களை, தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் ஒன்றிய அரசு தண்டிக்க உள்ளதுதான் மிகப்பெரிய அநீதி.


2026ம் ஆண்டுக்குப் பிறகு நடைபெறும் தொகுதி மறுசீரமைப்பின் போது மக்களவையில் மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தில் ஏற்படும் மாற்றங்கள்

| மாநிலம் | தற்போதுள்ள எம்.பி. தொகுதிகள் | 2026-க்குப் பிறகு திட்டமிடப்பட்டுள்ள விகிதாச்சார இடங்கள் | இடங்கள் இழப்பு/கூடுதல் |
|---|---|---|---|
| தமிழ்நாடு | 39 | 31 | -8 |
| ஆந்திரா+தெலங்கானா | 42 | 34 | -8 |
| கேரளா | 20 | 12 | -8 |
| மேற்கு வங்கம் | 42 | 38 | -4 |
| ஒடிசா | 21 | 18 | -3 |
| கர்நாடகா | 28 | 26 | -2 |
| ஹிமாச்சல் பிரதேசம் | 4 | 3 | -1 |
| பஞ்சாப் | 13 | 12 | -1 |
| உத்தகாண்ட் | 5 | 4 | -1 |
| அசாம் | 14 | 14 | 0 |
| மஹாராஷ்டிரா | 48 | 48 | 0 |
| சத்தீஸ்கர் | 11 | 12 | +1 |
| டெல்லி | 7 | 8 | +1 |
| குஜராத் | 26 | 27 | +1 |
| ஹரியானா | 10 | 11 | +1 |
| ஜார்கண்ட் | 14 | 15 | +1 |
| மத்திய பிரதேசம் | 29 | 33 | +4 |
| ராஜஸ்தான் | 25 | 31 | +6 |
| பீகார் | 40 | 50 | +10 |
| உத்தர பிரதேசம் | 80 | 91 | +11 |

SPARK MEDIA
SparkMedia_TN 25/02/2025




ஏற்கெனவே மாநிலங்களவை உறுப்பினர்கள் நியமனம் மக்கள்தொகையின் அடிப்படையில் அமைக்கப்படுகிறது. இதுவே ஜனநாயக விரோதமானது. மக்களவைக்கு மக்களின் பிரதிநிதிகள் அனுப்பப்படும் வேளையில், மாநிலங்களவைக்கும் மக்கள்தொகையின் அடிப்படையில் பிரதிநிதிகள் அனுப்பப்படுவது நியாயமல்ல. அமெரிக்காவில், மக்களுக்கான பிரதிநிதிகள் அவையில் (House of Representatives) மக்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் நியமிக்கப் படுகிறார்கள். ஆனால் செனட் சபை எனப்படும் மாநிலங்களுக்கான அவையில் (Senate) ஒவ்வொரு மாநிலத்திற்கும் இரண்டு பிரதிநிதிகள் நியமிக்கப்படுகிறார்கள். மொத்தமாக 50 மாகாணங்கள் அல்லது மாநிலங்கள் அமெரிக்காவில் உள்ளன. எனவே மாகாணத்திற்கு இருவர் என்று மொத்தம் 100 பேர் செனட் சபையில் உள்ளனர். மாநிலங்களுக்குள் சிறியவை, பெரியவை என்று வேறுபாடு இல்லை. இது உண்மையான கூட்டாட்சியைக் குறிக்கிறது. ஆனால் இந்திய அரசியலமைப்பிலோ இத்தகைய கூட்டாட்சிப் பார்வை இல்லாமல், மாநிலங்களவையும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பாக உள்ளது.

மக்களவைக்கும் மாநிலங்களிடையே பெருத்த பாகுபாடு ஏற்கெனவே நிலவும் சூழலில், இந்நிலையில் முதல்வரின் குரல் முக்கியமானது. “தற்போதைய மக்களவைத் தொகுதிகள் எண்ணிக்கையின் அடிப்படையில்கூட, பல்வேறு நியாயமான கோரிக்கைகளை, தமிழ்நாடு பெற இயலவில்லை. ஒன்றிய அரசின் அதிகாரக் குவிப்பு, ஒன்றிய அரசு சார்ந்த திட்டங்களில் நிதி குறைக்கப்படுவது அல்லது விடுவிக்கப்படாமல் தடுப்பது, ஒன்றிய அரசு அதிகாரத்தில் நமது பிரதிநிதித்துவம் குறைந்து வருவது, நிதிப் பகிர்வில் காட்டப்படும் பாரபட்சம் என அனைத்து வகைகளிலும், தமிழ்நாட்டின் உரிமைகளும், சுயாட்சியும் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலையில், நமது மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை மேலும் குறைக்கப்பட்டால், தமிழ்நாட்டின் குரல்வளை முழுமையாக நசுக்கப்படும்............ நீட் நுழைவுத் தேர்வு, பல்கலைக்கழக மானியக் குழுவின் மூலமாக மாநில அரசுகளின் உயர்கல்வித் துறையின் உரிமைகளை அபகரிப்பது, நமது தனித்துவமான பண்பாடு மற்றும் மொழிப்பாதுகாப்புக் கொள்கைகளை நமது மாநிலத்தின் மீது திணிப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து ஒன்றிய அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு நடந்தால், இப்பிரச்சினைகளுக்கு எதிராகக் கிளர்ந்து, நமது தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கான ஆற்றலும், அதிகாரமும் இல்லாத நிலை ஏற்படும் அபாயத்தை நாம் எதிர்நோக்கியுள்ளோம்” என்ற முதல்வரின் கூற்று மிகச் சரியானது.

இந்த செய்தி மக்களிடையே பேசுபொருளாக வேண்டும். மக்களிடம் இந்த ஆபத்து குறித்த புரிதலை ஏற்படுத்த வேண்டும். இதுகுறித்து, பாதிக்கப்படும் மற்ற மாநிலங்களோடும் இணைந்து செயல்பட்டால் மட்டுமே வரவிருக்கும் ஜனநாயகத்திற்கான அச்சுறுத்தலை எதிர்கொள்ள முடியும்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian